# இன்று பாஸ்காக் காலம் மூன்றாம் ஞாயிறு.

*திருவழிப்பாட்டு ஆண்டு* B *(19-04-2015)*

## *திருப்பலி முன்னுரை*

இறை இயேசுவில் அன்பிற்கினியவர்களே உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்தைப் பணிவோடு தெரிவித்துக்கொள்வதில் மகிழ்கிறேன். உயிற்பின் காலத்தில் இந்த மூன்றாம் வாரத்தில் இறைப்பணியாற்ற அன்போடு தூண்டப் பெறுகிறோம். அதன் ஒருசில கூறுகளை இன்றைய திருப்பலி வாசகங்கள் நம்முன் வைக்கின்றன.

மிகச் சாமானிய மக்களாயிருந்த இயேசுவின் சீடர்கள் எளிய மனத்தினர். பாமரர்கள். ஆனால் ஆண்டவர் இயேசுவில் பற்றுக் கொண்டவர்கள். இயேசு உயிர்த்தெழுந்துவிட்டார் எனும் உறுதியைப் பெற்றபின் மகிழ்வுற்றவர்களானார்கள். மீட்பராம் இயேசு பாவம் போக்கும் பலியாகி மனிதருடைய பாவங்களுக்கு மன்னிப்புப் பெற்று பாவத்தின் பலனாகிய சாவை வென்று உயிர்த்தெழுந்தார் எனும் உண்மையை உணர்ந்துகொள்ளப் பெறார்கள். அதை உலகோர்க்கு அறிவித்து அந்த மீட்பின் நிலையை அடைய விரும்புவோர் இயேசுவில் நம்பிக்கை கொள்ளவேண்டுமென்பதை உலகோர்க்கு அறிவிக்க இயேசுவால் உணர்த்தப்பட்டார்கள். தூய ஆவியால் உறுதியூட்டப்பட்டபின் இயேசு தங்களுக்குப் பணித்த பணியைத் துணிவோடு செயல்படுத்தத் தொடங்கினர். நாமும் இப்பணியைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் எனும் உணர்வு பெற்றவர்களாக வாழ, செயல்பட வரம்வேண்டி இன்று இத்திருப்பலியில் பங்கேற்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**பாவத்தின்மீதும், சாவின்மீதும் கிறிஸ்து இயேசுவை வெற்றி கொள்ளச் செய்த தந்தையே இறைவா!**

தூய ஆவியின் நிறை வல்லமையால் இன்றைய திருச்சபையில் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவரும் மீட்பின் பாதையில் மக்களை வெற்றியுடன் வழிநடாத்திச் செல்ல வேண்டிய சக்தியையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தந்தையே இறைவா!**

உடல் நலம் இன்றித் தவிப்பவர்கள், மனநலம் குன்றித் துன்புறுவோர் இவர்களுக்கு உயிர்த்த இயேசுவின் ஆற்றலாலும், மகிமையாலும் அனைத்து உதவிகளும் நல்மனம் கொண்டவர்கள் வழியாகக் கிடைத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இரக்கத்தின் ஊற்றே இறைவா,**

உலகத்தின் கவலைகளுக்கும், துன்பங்களுக்கும் தீர்வு தேடி அலையும் மக்கள் அனைவரும், உம் வழியாக அமைதி காணவும், நீரே உண்மையான கடவுள் என்பதை உணரவும், உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும் நற்கருணையில் உம் திருமகனின் உடனிருப்பை உணரவும், பிற சமயத்தினர் முன்னிலையில் உமக்கு சான்று பகரவும் உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**இரக்கத்தின் நிறைவே இறைவா,**

உயிர்ப்பை கொண்டாடி மகிழுகின்ற நாங்கள் உயிர்ப்பு தரும் நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பினை உணர்ந்திடவும், பாவம், நோய், ஏழ்மை, வன்முறை, மதவெறி, தீவிரவாதம் போன்றவற்றால் வீழ்ந்து கிடக்கும் அனைவரும், மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த உம் திருமகனைப் போல,புது வாழ்வுக்கு உயிர்த்தெழ உதவிபுரிய வேண்டுமென்று, உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றாகிய இறைவா!**

ஆதரவற்றோர், கைவிடப்பட்டோர், நோயுற்றோர் மற்றும் வறுமையில் வாடுவோர் அனைவரும் உமது பாதுகாப்பையும், பராமரிப்பையும் பெற்று மகிழ்ந்திட வேண்டுமென்றும், உடலின் உயிர்ப்பினால் மாட்சிபெற்ற உம் திருமகனைப் போன்று, உள்ளத்தின் உயிர்ப்பினால் உமது மாட்சியில் பங்குபெறும் தகுதி அடையுமாறு எம் நாட்டினர் அனைவருடைய வாழ்வையும் புதுப்பிக்க வேண்டுமென்றும், உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள் நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.